**People's Insurance PLC,** No. 07, Havelock Road, P.O. Box 215, Colombo 05.
Tel: +94 11-2126 126 | Fax: +94 11-2126 109 | E-mail: pilassist@plc.lk | www.peoplesinsurance.lk
(A Subsidiary of People's Leasing & Finance PLC and People's Bank) - Company No. PB 3754 PQ

PEOPLE'S INSURANCE
EMPOWERING A RESILIENT NATION

# தனிநபர் விபத்துக் காப்புறுதி – காப்புறுதித் திட்டம் பற்றிய தகவல் ஆவணம் (IPID)

**காப்புறுதி வகை:** தனிநபர் விபத்துக் காப்புறுதி

**வழங்கப்படுகின்ற அடிப்படைக் காப்பீடு:**

காப்புறுதி செய்யப்பட்ட ஒருவருக்கு மரணம் அல்லது உடற்காயம் ஏற்படுவது, வன்முறையான, எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற வெளிவாரி மற்றும் கற்புலனாகின்ற ஒரு வழிமுறையிலாயின் மற்றும் அது பற்றி காப்புறுதி அட்டவணையில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டும் இருந்தால் காப்புறுதிக் கம்பனி (பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ) கீழே உள்ளவாறு அனுகூலங்களை செலுத்தும்:

1. மரணம் - காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காப்புறுதித் தொகை.

2. நிரந்தர பூரண இயலாமை - காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காப்புறுதித் தொகை.

3. நிரந்தர பகுதி இயலாமை - காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதித் தொகையின் விகிதாசாரமொன்று.

4. ஒரு வாரத்திற்கும் மேலாக நிலவும் தற்காலிக நிரந்தர இயலாமை - காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாராந்தம் செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை

5. ஒரு வாரத்திற்கும் மேலாக நிலவும் தற்காலிக பகுதி இயலாமை - காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாராந்தம் செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை

*(அடிப்படைக் காப்பீடு பற்றிய விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 02 ஆம் பக்கத்தில் ''நிரந்தர இயலாமை'' அட்டவணையைப் பார்க்க)*

**மேலதிக காப்பீடுகள் (மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்):**

1. மோட்டார் சைக்கிள் காப்பீடு - *காப்புறுதிப்பத்திரத்தின் விதிவிலக்கு 01 நீக்குதல்*
2. பணிப்புறக்கணிப்பு, கலகம் மற்றும் பொதுமக்கள் கொந்தளிப்பு - *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள ''புறக்குறிப்பை'' பார்க்க – பயங்கரவாத புறக்குறிப்பு – SRCC புறக்குறிப்பு SR 07*
3. பயங்கரவாதம் - *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள ''புறக்குறிப்பை'' பார்க்க – பயங்கரவாத புறக்குறிப்பு – TR 13*
4. உங்களின் காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறேதேனும் காப்பீடுகள்

**முக்கியமான இலட்சணம்(ங்கள்):**

- காப்பீடு உலகம் முழுவதும் 24 மணிநேரமும் செயற்படும்.

**People's Insurance PLC,** No. 07, Havelock Road, P.O. Box 215, Colombo 05.
Tel: +94 11-2126 126 | Fax: +94 11-2126 109 | E-mail: pilassist@plc.lk | www.peoplesinsurance.lk
(A Subsidiary of People's Leasing & Finance PLC and People's Bank) - Company No. PB 3754 PQ



**ஏற்பாடுகள்:**

1. காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை காப்புறுதித் தொகையைத் தாண்டாது - *தயவுசெய்து "ஏற்பாடுகள்" எனும் பிரிவின் கீழ் 02 ஆம் பக்கம் விடய இலக்கம் 02 ஐப் பார்க்க)*
2. காணாமல் போனமைக்கான உரிமைக்கோரல் செலுத்தப்படுவது, பொருத்தமான சாட்சிகள் சகிதம் 12 மாதங்களின் பின்னரேயாகும்.

**காப்பீடு வழங்கப்படாதவை (விதிவிலக்குகள்):**

1. மோட்டார் சைக்கிள் (ஒரு மேலதிக காப்பீடாக பெற்றுக் கொள்ளப் பட்டிருக்காவிட்டால்) / எந்தவொரு வகையையும் சார்ந்த ஓட்டப்போட்டி (கால்களைப் பயன்படுத்துவதை தவிர) / பணிமீது மேற்கொள்ளும் தொழில்சார் விளையாட்டு / கயிறை மற்றும்/அல்லது வழிகாட்டியைப் பயன்படுத்தி மலையேறுதல் / நீருக்கடியில் செயற்பாடுகள் / குகைக்குள் பயணம் / விபத்துக்காக விசேட அபாயவாய்ப்பு இருக்கின்ற பொழுதுபோக்கு செயற்பாடுகள்
2. அனுமதி பெற்றுள்ள சக்திவளத்தால் செலுத்தப்படுகின்ற ஒரு விமானத்தில் ஒரு பயணியாக அல்லாமல், பறத்தல் அல்லது எந்தவொரு வான் பறப்பு செயற்பாடுகளும். பயணி என்ற பிரயோகத்தில் விமான பணியாளர்களின் எந்தவொரு உறுப்பினரும் அல்லது விமானத்திற்குள் அல்லது விமானத்தின் மேல் சேவையாற்றுகின்ற தொழில்நுட்பவியலாளர்கள் அடங்க மாட்டார்கள்.
3. பிள்ளைப்பேறு அல்லது கருத்தரித்தல், அவ்வாறான ஒரு நிகழ்வு எதிர்பாராத விதமாக விரைவுபடுத்தப்பட்டு அல்லது துரிதப்படுத்தப்பட்டு இருந்தாலும்
4. மதுபானம் அருந்தியிருத்தல், வேண்டுமென்றே சுயகாயம் ஏற்படுத்திக் கொள்ளல், மனித உயிரைக் காப்பாற்றும் ஒரு முயற்சியைத் தவிர, வேண்டுமென்றே விசேட அபாயவாய்ப்பொன்றுக்கு உட்படுதல்
5. யுத்தம்
6. கலகம் மற்றும் பணிப்புறக்கணிப்பு மற்றும் பயங்கரவாதம் (ஒரு மேலதிகக் காப்பீடாக பெற்றுக் கொண்டிருக்காவிட்டால்)
7. எந்தவொரு ஆயுதப் படையிலும் பணியில் இருக்கும் போது சேவையில் ஈடுபட்டிருக்கும் போது
8. குறைந்தபட்ச வயதெல்லைக்கு (18 வருடங்கள்) குறைந்த மற்றும் அதிகபட்ச வயதெல்லைக்கு (65 வருடங்கள்) மேற்பட்ட நபர்கள்
9. அ. ஏதும் அணு எரிபொருளில் இருந்து அல்லது அணுப் பொருத்துகை, பிரதிச் செயற்பாடு அல்லது ஏனைய அணுச் சேர்க்கை அல்லது அணு எரிபொருள் ஆகியவற்றினால் வரும் அயனாக்கும் கதிர்வீச்சுக்கள் அல்லது ரேடியோக்கதிரியக்கங்கள்.

   ஆ. ரேடியோக் கதிரியக்கம், அணுப் பொருத்துகை, பிரதிச் செயற்பாடு அல்லது ஏனைய அணுச் சேர்க்கை அல்லது அணு எரிபொருள் ஆகியவற்றின் விஷவாயு வெடித்தல் அல்லது ஏனைய அபாயகரமான அல்லது மாசடைந்த பொருட்கள்

   இ. அணு அல்லது அணுப்பிளவு மற்றும் / அல்லது பிணைவு அல்லது அது போன்ற ஏனைய செயற்பாடுகள் அல்லது கதிரியக்க சக்தி அல்லது பொருள் பயன்படுத்தப்படுகின்ற ஏதும் ஓர் ஆயுதம்.

**People's Insurance PLC,** No. 07, Havelock Road, P.O. Box 215, Colombo 05.
Tel: +94 11-2126 126 | Fax: +94 11-2126 109 | E-mail: pilassist@plc.lk | www.peoplesinsurance.lk
(A Subsidiary of People's Leasing & Finance PLC and People's Bank) - Company No. PB 3754 PQ

*(மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 01 மற்றும் 02 ஆம் பக்கங்களில் ''விதிவிலக்குகள்'' எனும் பிரிவைப் பார்க்க)*

**<u>கட்டுப்பணம் செலுத்தும் முறை:</u>**

காப்புறுதிக்கான கட்டுப்பணம் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற புதுப்பித்தலின் போது கட்டுப்பணங்கள் (காப்புறுதி அட்டவணையில் வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால்) வருடாந்தம் செலுத்தப்பட வேண்டும்.

**<u>பின்னுரித்தாளி நியமிக்கப்பட்டிருக்க வேண்டியதன் அவசியம்:</u>**

காப்புறுதியை வழங்குகின்ற சந்தர்ப்பத்திலேயே பின்னுரித்தாளிகளையும் நியமித்தல் அவசியமாகும். காப்புறுதி நியதிகளுக்கு இணங்க, காப்புறுதிக் காலஎல்லையில் பின்னுரித்தாளிகளை மாற்றலாம். இது உரிமைக்கோரிக்கை செலுத்தும் போது ஏற்படக்கூடிய எந்தவொரு முரண்பாடுகளையும் தவிர்க்கும்.

**<u>உரிமைக்கோரல் நடைமுறை மற்றும் தேவையான ஆவணங்கள்:</u>**

இந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் ஓர் உரிமைக்கோரிக்கை விடுக்க முடியுமான ஒரு நிகழ்வு பற்றிய அறிவித்தல் உடனடியாக காப்புறுதிக் கம்பனிக்கு விடுக்கப்பட வேண்டும். அவ்வாறான எந்தவொரு நிகழ்வும் இடம் பெற்று முப்பது (30) நாட்களுக்குள் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட உரிமைக்கோரல் படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:

1. மரணம்:-
   - மரண அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி
   - பிணப்பரிசோதனை அறிக்கையின்/திடீர் மரண விசாரணை அறிக்கையின் பிரதி
   - சட்டபூர்வமான உரித்துடையவர்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள்
     - சட்டபூர்வமான உரித்துடையவர் ஒரு பிள்ளையாயின் பிறப்பு சான்றிதழ்
     - சட்டபூர்வமான உரித்துடையவர் வாழ்க்கைத்துணையாயின் விவாக சான்றிதழ்
     - சட்டபூர்வமான உரித்துடையவர் பெற்றோராயின் காப்புறுதி செய்யப்பட்டவரின் பிறப்பு சான்றிதழ்
   - பொலிஸ் அறிக்கையின் ஒரு பிரதி (பொருத்தமாயின்)
   - காப்புறுதிக் கம்பனி நியாயமாக கோரக்கூடிய வேறேதும் ஆவணங்கள்
2. நிரந்தர இயலாமை மற்றும் தற்காலிக இயலாமை:-
   - மருத்துவ சான்றிதழ் / இயலாமையை உறுதிப்படுத்தும் நோய் நிருணய அட்டை
   - பொலிஸ் அறிக்கையின் ஒரு பிரதி (பொருத்தமாயின்)
   - தொழில்தருனரின் உறுதிப்படுத்தும் சான்றிதழ் (தேவைப்பட்டால்)
   - காப்புறுதிக் கம்பனி நியாயமாக கோரக்கூடிய வேறேதும் ஆவணங்கள்

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 05 ஐப் பார்க்க.*

**<u>மோசடி:</u>**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் எந்தவொரு உரிமைக்கோரலும் எந்த வகையிலாவது மோசடியானதாக இருந்தாலோ அல்லது காப்புறுதி செய்யப்பட்டவர் அல்லது அவர் சார்பாகச் செயல்படும் எவரேனும் மேசடியான வழிகளையோ அல்லது தந்திரங்களையோ பயன்படுத்தினாலோ அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுமென்ற செயலால் அல்லது அவரது உடந்தையுடன் ஏதேனும் அழிவு காயம் அல்லது சேதம் ஏற்பட்டாலோ இந்தக் காப்புறுதிப்பத்தின் கீழுள்ள அனைத்து அனுகூலங்களும் இழக்கப்பட்டுவிடும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 07 ஐப் பார்க்க.*

**<u>காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:</u>**

**முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துவது பற்றி காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு**

- கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில்:- எந்தவொரு உரிமைக்கோரல் நிராகரிப்பையும் தடுத்துக் கொள்வதற்காக பிரேரணைப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து முக்கியமான விடயங்களையும் உண்மையாகவும் சரியாகவும் வெளிப்படுத்தவும்.

- காப்புறுதிக் காலஎல்லையில்:- அபாயவாய்ப்பு மற்றும் தனிப்பட்ட தகவல்களில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றி காப்புறுதிக் கம்பனிக்கு அறிவிக்கவும்.

  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 03 ஐப் பார்க்க.*

**உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:-**

- உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது:- உரிமைக்கோரல் படிவத்துடன் உரிமைக்கோரல் செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் வழங்கவும்.
  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 05 ஐப் பார்க்க.*

- கட்டுப்பணம் செலுத்துதல்:- காப்புறுதிப்பத்திரத்தின் கட்டுப்பணம் செலுத்தும் செயலாணைக்கு இணங்க இருத்தல் வேண்டும்.
  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 04 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 11 ஐப் பார்க்க.*

**<u>முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறை:-</u>**

உங்களுக்கு சேவை வழங்க நாம் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறோம் என்பதுடன் உங்களின் ஆலோசனைகளை/முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். எமது சேவை தொடர்பில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் பின்வரும் முறைகள் ஊடாக ஒரு முறைப்பாட்டை முன்வைக்கலாம்:

- தொலைபேசி மூலம் - வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் – 011 2126136
- மின்னஞ்சல் மூலம் - <u>pilassist@peoplesinsurance.lk</u>

- வட்ஸ்அப் மூலம் - 0716230048
- தொலைநகல் மூலம் - 011 2126109
- தபால் மூலம் - வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர், பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ, இலக்கம் 07, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05
- ஒன்லைன் வழியாக – முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் படிவத்தை எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து "முறைப்பாடுகள்" டெப் ஐ அழுத்தவும்.
- எமது அலுவலகத்துக்கு வருவதன் மூலம்

ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும்:-

i. முறைப்பாட்டை சுருக்கமாக
ii. உங்களின் பெயர் மற்றும் உங்களைத் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள்
iii. குறிப்புகள்: காப்புறுதிப்பத்திர இலக்கம் / வாகன இலக்கம் / உரிமைக்கோரல் இலக்கம்
iv. உறுதிப்படுத்துகின்ற எந்தவொரு ஆவணமும்

முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறையை மும் மொழிகளிலும் எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து "முறைப்பாடுகள்" டெப் ஐ அழுத்தவும்.

**முரண்பாடுகளைத் தீர்த்தல்:-**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு முறைப்பாட்டுக்காக எம்மால் வழங்கப்பட்ட தீர்வு உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால், கீழுள்ள மாற்று முரண்பாடுகளைத் தீர்க்கும் பொறிமுறையை நீங்கள் பயன்படுத்தலாம்:

| | |
|---|---|
| i. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:- | இலங்கை காப்புறுதி ஓம்புட்ஸ்மன்<br>இல. 1, பெதஸ்தா பிளேஸ், கொழும்பு 05<br>info@insuranceombudsman.lk<br>011 2505542 / 011 250 5041 |

ii. மத்தியஸ்தம்:- காப்புறுதிப்பத்திரத்தின் மத்தியஸ்த வாசகத்தின்படி

| | |
|---|---|
| iii. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:- | பணிப்பாளர் – ஆய்வு<br>இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு<br>11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்,<br>உலக வர்த்தக மையம்,<br>கொழும்பு 01<br>011 2396184-9 / 011 2335167 |

investigation@ircsl.gov.lk / info@ircsl.gov.lk

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 04 மற்றும் 05 ஆம் பக்கங்களில் ''முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறை'' எனும் பிரிவைப் பார்க்க.*

**கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்**

**காப்புறுதியை இரத்துச் செய்தல்:**

காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோலுக்கு இணங்க இந்தக் காப்புறுதியை எந்த வேளையிலும் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதுடன், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், எந்தவொரு உரிமைக்கோரிக்கையையும் பெற்றுக் கொண்டிருக்கக் கூடாது எனும் நிபந்தனைக்குட்பட்டு, காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதி அமுலில் இருந்த காலஎல்லைக்கான பொதுவான குறுகிய கால விகிதாசாரமொன்று தக்க வைத்துக் கொள்ளப்படும். காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு காப்புறுதிக் கம்பனியின் விருப்பத்துக்கு இணங்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காப்புறுதியை இரத்துச் செய்ய முடியும் என்பதுடன், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யும் திகதியில் இருந்து காலாவதியாகாமல் இருக்கும் காலஎல்லைக்காக கோரிக்கை விடுக்கப்பட்டால் கட்டுப்பணத்தின் விகிதாசார பங்கொன்றை காப்புறுதி கம்பனி திருப்பி செலுத்த வேண்டும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தில் ''நிபந்தனைகளின்'' கீழுள்ள விடய இலக்கம் 08 ஐப் பார்க்க.*

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை முறையாகக் கடைபிடிப்பது மற்றும் பின்பற்றுவது, இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் எந்தவொரு கொடுப்பனவையும் மேற்கொள்வதற்கான ஒரு முன்-நிபந்தனையாக இருக்கும்.

**முக்கிய குறிப்புகள்:**

1. காப்புறுதித் திட்டங்கள் பற்றிய ஆவணத்தின் (IPID) நோக்கமாக இருப்பது, அடிப்படைக் காப்பீடு மற்றும் மேலதிக காப்பீடுகளின் (ஏற்புடையதானால்) மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் முக்கியமான இலட்சணங்கள் பற்றிய சாராம்சம் ஒன்றை வழங்குவதாகும் என்பதுடன் அது உங்களின் குறிப்பிட்ட பிரத்தியேக தேவைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளதொன்றல்ல என்பதைக் கவனிக்கவும். இந்தக் காப்புறுதியுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்களை மேலோங்கி நிற்கும் காப்புறுதிப்பத்திரத்தின் ஆங்கிலப் பதிப்பின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளால் நிருவகிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்காக:**

உங்களுக்கு மேலதிக தகவல்கள் அவசியமானால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்:

- தொலைபேசி - 0112126126
- மின்னஞ்சல் - pilassist@peoplesinsurance.lk
- நாடு முழுவதும் அமைந்துள்ள எமது கிளை அலுவலகமொன்றுக்கு வருவதன் மூலம்